# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 335/பேரூ/2023
நாள். 12.12.2023

திரு. L.R. ஜெயசேகர்
ரீத்தாபுரம்,
கன்னியாகுமரி மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
ரீத்தாபுரம் பேரூராட்சி ,
கன்னியாகுமரி மாவட்டம். .... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் அஞ்சல், ஈத்தம்பாடு, எண்.13–98F/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L.R. ஜெயசேகர் என்பவரின் 18.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 25.09.2023 அன்று பெறப்பட்டு, 335/பேரூ/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம் அஞ்சல், ஈத்தம்பாடு, எண்.13–98F/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. L.R. ஜெயசேகர் என்பவர் தனது 18.09.2023 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான், கன்னியாகுமரி மாவட்டம் ரீத்தாபுரம் பேரூராட்சியின் 7வது வார்டு மன்ற உறுப்பினராக உள்ளேன். ரீத்தாபுரம் பேரூராட்சி தலைவர் எட்வின் கோஸ் அவர்களின் வார்டான 10–வது வார்டு, சலேட் நகரில் இருந்து குன்னங்கல் வயல் காலனி செல்லும் சாலை மேம்பாடு செய்தல் பணிகளை செய்யாமல் பேரூராட்சி பொது நிதியில் இருந்து 9,20,000/– கையாடல் செய்து பேரூராட்சியில் நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர். 10வது வார்டில் வண்ணான்விளை நடுக்குளம் ஒன்றும் 11ம் வார்டில் கண்டர் விளாகம் நடுக்குளம் ஒன்றும்

உள்ளது. இவ்விரண்டு குளங்களிலும் எந்தவித தடுப்பு சுவரும் கட்டப்படவில்லை. தடுப்புச் சுவர் கட்டியதாகக் கூறி பேரூராட்சி அலுவலர்களின் உதவியுடன் ஒப்பந்ததாரர்கள் அதற்கான தொகை பெற்றுள்ளனர். இதனால் ரீத்தாபுரம் பேரூராட்சிக்கு ரூபாய் 8,83,200/– நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. 14வது வார்டில் பண்டாரவிளை வள மீட்பு பூங்காவில் சுற்றுச்சுவர் அமைத்தல் வேலைக்கு ரூ.15,58,394/– ஒப்பந்ததாரருக்கு வழங்கியதிலும் 12 லட்சம் ரூபாய் அளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. இதற்கு காரணமாக இருந்துள்ள ரீத்தாபுரம் பேரூராட்சி தலைவர் மற்றும் செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்துள்ளார்.

(2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.11.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் ரீத்தாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

(3) ரீத்தாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர், தனது 09.11.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

ரீத்தாபுரம் பேரூராட்சி 10வது வார்டு சலேட்நகரில் இருந்து குன்னங்கல் வயல்காலனி செல்லும் சாலை மேம்பாடு செய்தல் பணி பொதுநிதி 2022–23ன் கீழ் பேரூராட்சி மன்ற தீர்மான எண்.71 நாள் 07.06.2022ன்படி மன்ற நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 19.09.2022ம் தேதி பெறப்பட்டது. இதனுடன் இதர மற்ற வார்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் 11 வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. மன்ற உறுப்பினர்களுக்கு சார்பு செய்யப்பட்ட அஜண்டாவில் 10 வேலைகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் மட்டுமே கணினியில் தட்டச்சு செய்து அனுப்பப்பட்டது. மேற்படி ஒரு பணிக்குரிய ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் விடுபட்டுள்ளது. விடுபட்ட ஒப்பந்தப்புள்ளியை சேர்க்க மன்ற கூட்டத்தில் வைத்து மன்ற உறுப்பினர்களிடம் ஒப்புதல் பெற்று தீர்மானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. 13.09.2022ம் தேதி வேலை செய்வதற்கான பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள 31.01.2023ல் நடைபெற்ற சாதாரண கூட்டம் பொருள் எண். 12 செலவு சீட்டு எண். 331/22.11.2022ல் சலேட் நகரிலிருந்து குன்னங்கல் வயல் காலனி செல்லும் சாலை மேம்பாடு செய்தல் பணியில் தடுப்புசுவர் அமைக்கப்பட்டதற்கு ரூ. 9,20,000/– ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை. 15வது நிதிக்குழு திட்டம் 2022–2023 முதல் தவணை குறும்பனை வயல்காலனி சமுதாய கழிப்பிடம் அருகில் அலங்கார தரை ஓடுகள் அமைக்க சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு உதவி செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப அனுமதி எண். AEE/90/2023-24 நாள் 26.05.2023–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ரூ.11.50 லட்சத்திற்கு 26.06.2023ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 31.07.2023ம் தேதி மன்ற அங்கீகாரம் பெறப்பட்டு 31.07.2023–ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அப்பணி நடைபெற்று வருகிறது.

சலேட்நகரிலிருந்து குன்னங்கல் பகவதி அம்மன் கோயில் வழியாக குறும்பனை சர்ச் வரை மொத்த சாலைகளின் நீளம் 1058 மீ ஆகும்.

(1) மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள குன்னங்கல் குறும்பனை சிமெண்ட் சாலை பணியானது பொதுநிதி 2019–2020–ன் கீழ் குன்னங்கல் தேவி பள்ளி முதல் பகவதி

அம்மன் கோவில் முன் வரை 175.3 மீ தூரம் ரூ.4.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

(2) சலேட்நகர் முதல் குன்னங்கல் வரை வடிகால் மற்றும் அலங்கார தரை ஓடுகள் அமைத்தல் பணி பொது நிதி திட்டம் 2016–2017–ல் ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் 274.8 மீ வரை அமைக்கப்பட்டுள்ளது.

(3) பொது நிதி 2022–23ம் வருடம் குறும்பனை வயல்காலனி சமுதாய கழிப்பிடம் பக்கம் தடுப்புச்சுவர் அமைத்தல் பணி மதிப்பீடு ரூ. 9.80 லட்சம் மதிப்பீட்டில் 21.10.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மன்ற முன் அனுமதி பெறப்பட்டு 21.10.2022–ம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டு தடுப்புச்சுவர் பணி முடிக்கப்பட்டு செலவுச்சீட்டு எண். 19/12.04.2023ன்படி ரூ.9,01,600/– வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை.

<u>பொருள் எண். 2</u>

1) மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள 10வது வார்டு வண்ணான்விளை நடுக்குளம் மற்றும் 11–வது வார்டு கண்டர்விளாகம் நடுக்குளம் இவ்விரு குளங்களிலும் எவ்வித பணிகளும் மேற்கொள்ளவில்லை. மேலும் இதற்கு பேரூராட்சியிலிருந்து எவ்வித தொகையும் வழங்கப்படவில்லை.

2) 22.08.2022–ம் தேதிய சாதாரண கூட்டம் பொருள் எண்.(1)–ல் நடுக்குளம் அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல் பணி தேர்வு செய்யப்பட்டது. 19.09.2022ம் தேதிய மன்ற கூட்டத்தில் ரூ. 9.60 லட்சத்தில் மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

3) மனுதாரர் புகார் மனு பக்கம் எண்.6–ல் 27.02.2023–ம் தேதிய மன்ற கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நடுக்குளம் அருகில் தடுப்புச்சுவர் அமைத்தல் பணி 28.10.2022–ம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 27.03.2023ம் தேதி மன்ற கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

மேற்படி தடுப்புச்சுவர் பணி முடிக்கப்பெற்று செலவுச் சீட்டு எண்.78/31.05.2023ம் தேதி ஒப்பந்ததாரர்களுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. 31.07.2023–ம் தேதிய மன்ற கூட்டத்தில் செலவினங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

11–வது வார்டு கண்டர்விளாகம் நடுக்குளத்தில் எவ்வித பணியும் மேற்கொள்ளவில்லை. செலவினங்கள் ஏதும் மேற்கொள்ளவில்லை. பணி நடைபெறாத குளங்களின் புகைப்படத்தை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

10வது வார்டு வண்ணான்விளை நடுக்குளத்திலும் எவ்வித பணியும் நடைபெறவில்லை. செலவினங்களும் மேற்கொள்ளவில்லை. பணி நடைபெறாத குளங்களின் புகைப்படத்தை மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

10–வது வார்டு வயல்காலனியில் குன்னங்கல் அரசு மேல்நிலைப்பள்ளியின் மேற்கு பக்கம் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான காக்கை குளம், தாமரை குளம் மற்றும் பெரிய குளம் ஆகிய மூன்று குளங்கள் உள்ளன. 09/2021–ல் பெய்த பெருமழையின்போது மேற்படி மூன்று குளங்களும் நிரம்பி தண்ணீர் குடியிருப்பு பகுதியில் வீட்டு முற்றங்களில் சென்றது. இந்த வெள்ளை அபாயத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் தகவல் தொழில்நுட்பதுறை அமைச்சர் ஆகியோர் பார்வையிட்டு உடனடியாக இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு ஏற்படுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

மேலும் 13.11.2021 அன்று பெய்த கன மழையில் மேற்படி 3 குளங்களும் நிரம்பி காக்கை குளத்தில் மேற்குபக்கம் இருந்த பாதுகாப்பு மதில்சுவர் இடிந்து விழுந்தது தொடர்ந்து பெய்த மழையினால் குளத்திலிருந்து தண்ணீர் நிரம்பி வழிந்து

குடியிருப்புகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் நிலையில் இருந்ததால், குறும்பனை புனித இக்னேசியஸ் ஆலய பங்கு தந்தை உடைந்து விழுந்த மதில் சுவரை புதிதாக கட்டி ஊரையும் குடியிருப்புகளையும் பாதுகாக்க போர்க்கால அடிப்படையில் பணி செய்யுமாறு மனு சமர்ப்பித்துள்ளார். பணியின் அவசர அத்தியாவசியம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அவசரக்கால பணியாக பணிக்கான நடைமுறைகளை பின்பற்றி நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய விதிகளின்படி பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து உதவி செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு முறையாக அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கும் ஒப்புகை அட்டையுடன் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டது. 04.07.2022ல் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்று 05.07.2022ம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேலும் இப்பணியானது பொதுமக்களின் அவசர அத்தியாவசியம் கருதி அவசரக்கால பணிக்காக உரிய விதிமுறைகளைப் பின்பற்றி குறும்பனை வயல்காலனி பகுதியில் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிசெய்து முடிக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்.3</u>

மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ள வார்டு எண். 14 பண்டாரவிளை வளமீட்பு பூங்காவில் 15வது நிதிக்குழு மானியம் (Tied Grant) (2021-22)-ல் பேட்டரி வாகனம் நிறுத்தும் இடம் அமைத்தல் மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.17.00 லட்சம் ஆகும். நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிக்கு உதவி செயற்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டுள்ளது. 07.10.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தீர்மான எண். 150, நாள் 31.10.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 31.10.2022–ல் பணி ஆணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. செலவுச்சீட்டு எண். 24/19.04.2023–ன்படி ஒப்பந்ததாரர்க்கு ரூ.15,58,394/–ன்படி தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை.

மேலும் மனுதாரர் தலைவர் பதவிக்கு போட்டியிட்டு தோல்வியுற்றுள்ளார். 10வது வார்டு உறுப்பினர் இப்பேரூராட்சி மன்ற தலைவர் ஆவார். 10வது வார்டில் மீனவ மக்கள் சுனாமிக்கு பின் அதிக அளவில் குடிபெயர்ந்துள்ளனர். அவர்களுக்கு அத்தியாவசிய அடிப்படை வசதி செய்து கொடுக்க வேண்டியுள்ளது. 10–வது வார்டில் வேலை எதுவும் நடக்கக்கூடாது என மனுதாரர் தெரிவித்து வருகிறார்.

பேரூராட்சி மன்ற தலைவர் மற்றும் மனுதாரருக்கும் உள்ள கருத்து வேறுபாடு தொடர்பாக இப்புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

(4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 10.11.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.11.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(5) 10.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. L.R. ஜெபசேகர் என்பவர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

" நான் கன்னியாகுமரி மாவட்டம் ரீத்தாபுரம் பேரூராட்சியின் 7வது வார்டு மன்ற உறுப்பினராக உள்ளேன். ரீத்தாபுரம் பேரூராட்சி தலைவர் எட்வின் கோஸ் அவர்களின் வார்டான 10–வது வார்டு, சலேட் நகரில் இருந்து குன்னங்கல் வயல் காலனி செல்லும் சாலை மேம்பாடு செய்தல் பணிகளை செய்யாமல் பேரூராட்சி பொது நிதியில் இருந்து 9,20,000/– கையாடல் செய்து பேரூராட்சியில் நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளனர். 10வது வார்டில் வண்ணான்விளை நடுக்குளம் ஒன்றும் 11ம் வார்டில் கண்டர் விளாகம் நடுக்குளம் ஒன்றும் உள்ளது. இவ்விரண்டு குளங்களிலும் எந்தவித தடுப்பு சுவரும் கட்டப்படவில்லை,. தடுப்புச் சுவர் கட்டியதாகக் கூறி பேரூராட்சி அலுவலர்களின் உதவியுடன் ஒப்பந்ததாரர்கள் அதற்கான தொகை பெற்றுள்ளனர். இதனால் ரீத்தாபுரம் பேரூராட்சிக்கு ரூபாய் 8,83,200/– நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது. 14வது வார்டில் பண்டாரவிளை வள மீட்பு பூங்காவில் சுற்றுச்சுவர் அமைத்தல் வேலைக்கு ரூ.15,58,394/– ஒப்பந்ததாரருக்கு வழங்கியதிலும் 12 லட்சம் ரூபாய் அளவில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது.

மேலும் ரீத்தாபுரம் பேரூராட்சியில் மன்றத் தீர்மான புத்தகத்தில் பேரூராட்சியின் முதல் கூட்டத்தில் மட்டும் உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் நடைபெற்ற கூட்டங்களில் உறுப்பினர்களிடம் தீர்மான புத்தகத்தில் கையொப்பம் பெறப்படவில்லை. உறுப்பினர்களுக்கான அஜண்டாவில் குறிப்பிடாமல் உறுப்பினர்களுக்கும் மன்றத்திற்கும் மறைத்து தீர்மானப் புத்தகத்தில் 11வது இனமாக ஒரு பணியை மேற்கொள்வதாகக் கூறி, மன்றத் தலைவர் தன் கைப்பட நுணுக்கி நுணுக்கி எழுதியுள்ளார். அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் குறும்பனை வயல்காலனியில் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடம் பக்கம் அலங்கார தரை ஓடுகள் அமைப்பது குறித்த தீர்மானத்தில் அதற்கான மதிப்பீட்டுத் தொகை குறிப்பிடப்படவில்லை. மேலும் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தத் தொகையும் குறிப்பிடப்ட டாமல் காலியாக உள்ளது. அதன் நகலினையும் மேலும் இந்நேர்வு குறித்த ஆவணங்களின் நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

22.2.2023 முதல் ரீத்தாபுரம் பேரூராட்சி தலைவர் தான் வெற்றிபெற்ற 10வது வார்டில் சலேட் நகரிலிருந்து குன்னங்கல் வயல் காலனி செல்லும் சாலையில் 5 பணிகள் செய்வதற்கு மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு அதில் 4 பணிகளுக்கான பில் தொகை வழங்கப்பட்டுள்ளது. ரூபாய் 17,40,000/– (2) ரூபாய் 9,01,600/– (3) 9,20,000/– மற்றும் (4) 8,63,200/– ஆகமொத்தம் 44,44,800/– 4 பில் தொகையாக கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பில்லிற்கான தடுப்புச் சுவர் வேலை நடைபெற்றுள்ளது. நடைபெற்ற வேலையின் மதிப்பு ரூபாய் 6 இலட்சம் மட்டும். மேற்படி வேலைகளில் 38,44,800/– ரூபாய்க்கு எந்த வேலையும் நடைபெறவில்லை. 38,44,800/– ரூபாயை மேற்படி தலைவர் மற்றும் செயல் அலுவலர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் திருடி அரசுக்கும் பேரூராட்சிக்கும் நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

மேற்கண்ட முறைகேடுகள் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் புகாராக தெரிவித்ததில், முறைகேடு நடந்துள்ளதாகவும், அவை விசாரிக்கப்படும் என வாய்மொழியாக பதில் அளித்துள்ளார்.

எனவே மேற்கண்ட முறைகேடுகளை விசாரித்திடவும், ரீத்தாபுரம் பேரூராட்சியில் பெரும் அளவில் நிதி இழப்பு ஏற்படுவதைத் தடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(6) ரீத்தாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் 10.11.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள 10வது வார்டு வண்ணான்விளை நடுக்குளம் மற்றும் 11வது வார்டு கண்டர் விளாகம் நடுக்குளம் (புறம்போக்கு குளம்) ஆகிய குளங்களில் எவ்வித பணிகளும் நடைபெறவில்லை. அதற்காக எவ்வித தொகையும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படவில்லை.

பண்டாரவிளை வள மீட்புப் பூங்காவில் சுற்றுச் சுவர் அமைத்தல் மற்றும் பேட்டரி வாகன நிறுத்த இடம் அமைத்தல் ஆகியவற்றிற்கு 17 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு ஒப்பந்தத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மன்றத் தீர்மானப் புத்தகத்தில் உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறப்படுவதில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து எனது 9.11.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

(7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், ரீத்தாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கன்னியாகுமரி மாவட்டம், ரீத்தாபுரம், ஈத்தம்பாடுவை சார்ந்த மனுதாரர் திரு. L.R. ஜெயசேகர் என்பவர் தனது 18.09.2023 நாளிட்ட மனுவில் ரீத்தாபுரம் பேரூராட்சியில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார். மேலும் ரீத்தாபுரம் பேரூராட்சியில் மன்றத் தீர்மானப் புத்தகத்தில் பேரூராட்சியின் முதல் கூட்டத்தில் மட்டும் உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது எனவும் பின்னர் நடைபெற்ற கூட்டங்களில் உறுப்பினர்களிடம் தீர்மான புத்தகத்தில் கையொப்பம் பெறப்படவில்லை என்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரிடம் புகாராக தெரிவித்ததில், முறைகேடு நடந்துள்ளதாகவும் அவை விசாரிக்கப்படும் என வாய்மொழியாக பதில் அளித்தார் எனவும் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே பேரூராட்சிகளின் இயக்குநர், ஒரு குழு அமைத்து அந்த குழு ரீத்தாபுரம் உட்பட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் ஆய்வு செய்து இக்குறைபாடுகளை சரிசெய்யவும் மேற்கொண்டு உறுப்பினர்கள் மக்களின்

நலனுக்காக சிறப்பாக செயல்பட வழிவகைகளை ஏற்படுத்துவதுடன் பேரூராட்சிகள் மக்கள் நலப்பணிகளை எந்தவித இடர்பாடும் இல்லாமல் விரைந்து செய்வதை உறுதிசெய்திட வழிவகை செய்யப்பட வேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், ரீத்தாபுரம் பேரூராட்சியில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான அனைத்து பட்டியல்களை (Bills) உள்ளாட்சி நிதி தணிக்கை துறை தணிக்கை செய்து 3 மாத காலத்திற்குள் அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றது தெரிய வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை தொடர பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, டிசம்பர் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. L.R. ஜெயசேகர்,
எண்.13–98F/1, ஈத்தம்பாடு,
ரீத்தாபுரம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம்

2) செயல் அலுவலர்,
ரீத்தாபுரம் பேரூராட்சி ,
கன்னியாகுமரி மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600035

4) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை – 28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்,
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்